# Star Health and Allied Insurance Co. Ltd.

STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist

Date: May 01, 2022
Place: Chennai

**Ref: SHAI/B & S/SE/23/2022-23**

To,
The Manager
Listing Department
BSE Limited
Phiroze Jeejeebhoy Tower
Dalal Street
Mumbai – 400001
**Scrip Code: 543412**

To
The Manager
Listing Department
National Stock Exchange of India Limited
Exchange Plaza, 5th Floor, Plot C/1,
G Block, Bandra-Kurla Complex
Mumbai – 400051.
**Scrip Code: STARHEALTH**

Dear Sir(s),

**Newspaper Advertisement –Financial Results March 31, 2022.**

In compliance with Regulation 47 of the Securities and Exchange Board of India (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, we enclose herewith a copy of the extract of audited Financial Results for the quarter and year ended March 31, 2022 published in Financial Express (English Edition) and Dinamani (Tamil Edition).

The above information is also being hosted on the Company's website at www.starhealth.in

This is for your information and records.

Thanking you,

**For Star Health and Allied Insurance Company Limited**

Jayashree Sethuraman

STAR HEALTH AND ALLIED INSURANCE CO. LTD. STAR CORPORATE OFFICE CHENNAI-34

**Jayashree Sethuraman,**
**Company Secretary & Compliance Officer**

# மே தினம்: ஆளுநர், முதல்வர், தலைவர்கள் வாழ்த்து

**சென்னை, ஏப். 30:** மே தினத்தை ஒட்டி, தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

**ஆளுநர் ஆர்.என்.ரவி:** நமது சமுதாயத்தின் முன்னேற்றம், செழிப்பு, நல்வாழ்வு மற்றும் நாட்டுக்காக உழைக்கும் சக்திகளின் பங்களிப்பை கொண்டாடுவதற்கும், நினைவு கூருவதற்கும் மே தினம் உகந்த நாளாகும். உழைக்கும் மக்களிடையே குறிப்பாக, இளைஞர்களிடையே கடின உழைப்பை ஊக்குவிக்கவும், ஒற்றுமையை ஏற்படுத்தவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. அடுத்த 25 ஆண்டுகளில் நமது நாடு விரைவான சமூகப் பொருளாதார வளர்ச்சியை அடைவதை உறுதி செய்ய கடின உழைப்பை அளிப்போம். அதற்காக உறுதி ஏற்போம்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** தொழிலாளர்களின் உற்ற தோழனாகவும், அவர்களது உரிமைக் குரலைக் காதுகொடுத்து கேட்டு, அவற்றை நிறைவேற்றி வைக்கும் அரசாகவும் திமுக அரசு எப்போதும் விளங்கி வருகிறது. ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடையும் முன்பே தொழிலாளர்களுக்காக ஏராளமான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தொழிலாளர்களின் உரிமைகளுக்கும், நலனுக்கும் கேடயமாகவும், போர்வாளாகவும் திமுக எப்போதும் திகழும். தொழில் அமைதி மட்டுமே தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கான அடித்தளமாக இருக்கும் என்பதை மனதில் கொண்டு அனைவருக்கும் மே தின வாழ்த்துகள்.

**ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி (அதிமுக):** இந்த உலகம் இயங்குவது கோடானு கோடி தொழிலாளிகளால்தான். அதை நினைவூட்டும் நாள் மே தினம். உலகத் தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ளார்ந்த நன்றிப் பெருக்கோடு மே தின வாழ்த்துகள்.

**கே.எஸ்.அழகிரி (காங்கிரஸ்):** தொழில் வளர்ச்சி குன்றிய நிலையில் ஏற்பட்ட வேலை இழப்பால் தொழிலாளர்கள் வாழ்வில் கடுமையான பாதிப்புகளை எதிர்கொண்டு வரும் நிலையில் தங்களது உரிமைகளை பாதுகாக்கும் வகையில், உரிமைக்குரல் எழுப்பும் நாளாக மே தினம் அமைய வேண்டும்.

**ராமதாஸ் (பாமக):** உலகை இயக்கும் பாட்டாளிகளின் வாழ்க்கை மகிழ்ச்சியாக சுழல்வதை உறுதி செய்ய வேண்டிய கடமையும், பொறுப்பும் உலகத்துக்கும், மாநிலத்துக்கும் உள்ளது. அதை மதித்து பாட்டாளிகளுக்கு நியாயமாக வழங்கப்பட வேண்டிய உரிமைகளும், அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும்.

**வைகோ (மதிமுக):** மே 1 தொழிலாளர்களின் உரிமைத் திருநாளாக, உலகம் முழுமையும் தொழிலாளர் சமூகம் கொண்டாடி மகிழ்கிறது. தொழிலாளர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள்.

**கே. பாலகிருஷ்ணன் (மார்க்சிஸ்ட்):** உலகத் தொழிலாளர் தினமான மே தினத்தைக் கொண்டாடும் கரத்தாலும், கருத்தாலும் உழைக்கும் தமிழக உழைப்பாளர்களுக்கு மார்க்சிஸ்ட் சார்பாக புரட்சிகர வாழ்த்துகள். மே தினம் வெல்லட்டும்.

**இரா.முத்தரசன் (இந்திய கம்யூனிஸ்ட்):** அறிவியல் கருத்தியலுக்குத் தாங்கி பகுத்தறிவுப் பாதையில் பயணித்து, கற்பித ஜாதி மத சனாதனக் கருத்துகளை முறியடித்து யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற தொன்மை மரபை முன்னெடுத்து, சமூக சமத்துவம் காண மே தினத்தில் உறுதியேற்போம்.

**ஜி.கே.வாசன் (தமாகா):** நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கும் மக்களின் முன்னேற்றத்துக்கும் அயராது பாடுபடும் ஒவ்வொரு தொழிலாளர் குடும்பங்களின் வாழ்வு செழிக்க மே தின வாழ்த்துகள்.

அன்புமணி (பாமக), டிடிவி தினகரன் (அமமுக), ஜவாஹிருல்லா (மமக), கி.வீரமணி (திராவிடர் கழகம்) ஆகியோரும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

## தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக ந.அருள் நியமனம்

**சென்னை, ஏப். 30:** தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநராக ந. அருள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் மகேசன் காசிராஜன் பிறப்பித்துள்ள ஆணை: தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையில் மொழிபெயர்ப்பு இயக்குநராகப் பணியாற்றி வரும் ந.அருள், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.


ந.அருள்

அவரை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் பணியிடத்துக்கும், மொழிபெயர்ப்பு இயக்குநர் பணியிடத்துக்கும் முழுக் கூடுதல் பொறுப்பில் நியமனம் செய்தும் ஆணையிடப்படுகிறது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள ந.அருள் மூத்த தமிழறிஞர் அவ்வை நடராசனின் மகன் ஆவார்.

புதுதில்லிப் பல்கலைக்கழகத்தில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களின் மொழிபெயர்ப்புகள் குறித்து ஆங்கிலத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். கடந்த 2009-ஆம் ஆண்டு தலைமைச் செயலகத்தில் மொழிபெயர்ப்புத் துறை இயக்குநராக நியமிக்கப்பட்டார். கடந்த 2010-இல் கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டில் தமிழ் இணைய மாநாட்டின் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றினார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் பொறுப்பை இதற்கு முன்பு ஐஏஎஸ் அதிகாரி செ.சரவணன் வகித்து வந்தார்.

## மருத்துவக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டினால் நடவடிக்கை

**சென்னை,ஏப். 28:** மருத்துவக் கழிவுகளை பொது இடங்களில் கொட்டினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எச்சரித்துள்ளது.

பட்டினப்பாக்கம் கடற்கரைப் பகுதியில் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் மற்றும்பெருநகரசென்னை மாநகராட்சி அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அதில், 1.2 கிலோ மருத்துவக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு, உயிரி மருத்துவக் கழிவுகள் மேலாண்மை மையத்துக்கு கொண்டு சென்று அழிக்கப்பட்டது.

பொது இடங்களில் மருத்துவக் கழிவுகள் கொட்டுவோர் குறித்து அருகில் உள்ள தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகளிடம் உள்ளாட்சி அமைப்புகள் பொது மக்கள் புகார் அளிக்கலாம் என மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்தெரிவித்துள்ளது.

## உதவி வழக்கு நடத்துநர் முதன்மைத் தேர்வு: நுழைவுச் சீட்டு தயார்

**சென்னை,ஏப்.30:** அரசு உதவி வழக்கு நடத்துநர் பதவிக்கான முதன்மைத் தேர்வை எழுதவுள்ளோர் அதற்கான நுழைவுச் சீட்டுகளை பதிவிறக்கம் செய்யலாம் என்று அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு பொதுப் பணியில் அடங்கிய, இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கு நடத்துநர் பணிக்கான முதன்மைத் தேர்வுகள் வருகிற 7, 8 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது. சென்னை தேர்வு மையத்தில் மட்டுமே நடக்கவுள்ள இந்தத் தேர்வுக்கான நுழைவுச்சீட்டுகள் தேர்வாணைய இணையதளங்களில் (www.tnpsc.gov.in, www.tnpscexams.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவேற்றம் மூலமாக விண்ணப்ப எண், பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக் கூட நுழைவுச் சீட்டை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அண்மையில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

## நில அளவையாளர் பணிக்கான கல்வித் தகுதி விவரம் வெளியீடு

**சென்னை, ஏப். 30:** நில அளவையாளர் பணிக்கான கல்வித் தகுதி விவரங்களை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக வருவாய்த் துறை பிறப்பித்த உத்தரவு விவரம்: நில அளவை மற்றும் ஆவணங்கள் பாதுகாப்பு துணை ஆய்வாளர், கள அளவையாளர், வரைவாளர் ஆகிய பணியிடங்களுக்குத் தேவையான கல்வித் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, நில அளவை மற்றும் ஆவண பாதுகாப்பு துணை ஆய்வாளர் பதவிக்கு கட்டுமானப் பொறியியலில் இளநிலை பட்டம் அல்லது புவி தகவலியல் பட்டப் படிப்பில் இளநிலை பொறியியல் அல்லது புவியியலில் முதுகலை அல்லது புவிசார் தகவல் தொழில்நுட்பப் பாடத்தில் முதுகலை படிப்பு படித்திருக்க வேண்டும்.

பணியிடத்துக்கு முதுகலை அறிவியல் பாடம் தகுதியானதாகக் கருதப்பட்டால், இளநிலையில் பி.இ. அல்லது பி.எஸ்சி. பட்டப் படிப்பு கட்டாயம் படித்திருக்க வேண்டும்.

நில அளவையாளர் பணியிடத்துக்கும் கல்வித் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதன்படி, அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் குழு அங்கீகரித்துள்ள நிறுவனத்திடமிருந்து கட்டுமானப் பொறியியலில் பட்டயப் படிப்பு அல்லது தேசிய பயிற்சிக்கான கவுன்சில் அமைப்பு அளிக்கும் அளவையாளர் பயிற்சியை முடித்ததற்கான சான்றிதழ் அல்லது சென்னை பொறியியல் குழு அளிக்கும் நில அளவையாளர் சான்றிதழ் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

இதேபோல, வரைவாளர் பணிக்கு கட்டுமானப் பொறியியலில் பட்டயப் படிப்பு அல்லது தேசிய பயிற்சிக்கான கவுன்சில் அமைப்பு அளிக்கும் வரைவாளர் பயிற்சிக்கான சான்று ஆகியவற்றை பெற்றிருக்க வேண்டும்.

## காலமானார்
### கஜலட்சுமி இனியவன்

**செங்கல்பட்டு, ஏப்.30:** 'இலக்கிய வீதி' இனியவனின் மனைவி கஜலட்சுமி இனியவன் (79) உடல்நலக் குறைவால் சனிக்கிழமை (ஏப்.30) காலமானார்.



செங்கல்பட்டு மாவட்டம்,வேடந்தாங்கல்விநாயகநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த இவர், சென்னை அண்ணா நகரில் வசித்து வந்தார். இவர்களுக்கு வாசுகி பத்ரிநாராயணன் என்ற மகள் உள்ளார். இறுதிச் சடங்குகள் ஞாயிற்றுக்கிழமை (மே 1) காலை 10.30 மணியளவில் விநாயகநல்லூர் கிராமத்தில் நடைபெறுகின்றன.

தொடர்புக்கு: 98411 81345.

**10ஆம் ஆண்டு நினைவு நாள்**



தங்கள் நினைவால் வாடும்
மகள் – **செல்வி**
மருமகன் – **தினகர்**
மற்றும் **பேத்திகள், மருமகன்**
& **கொள்ளுப் பேரன்**

**INDIAN INSTITUTE OF INFORMATION TECHNOLOGY**
**TIRUCHIRAPPALLI – 620012, TAMIL NADU, INDIA.**

**PH.D PROGRAMME ADVERTISMENT**

**Ref.: IIITT/Advt/Ph.D/Odd Sem/May/2022**

Applications are invited from qualified candidates for admission to **Ph.D. Programme (Full Time/ Part Time)** in the disciplines of **CSE, ECE, Mech., Economics, English, Mathematics, and Physics.** The online application form and other details are available on Institute's website **www.iiitt.ac.in**

**The last date for submission of the duly filled-in application is 31.05.2022.**

Sd- Registrar (i/c)

**SBI பாரத ஸ்டேட் வங்கி**
பொழிச்சலூர் கிளை

எண். 22, கோப்ரேட்டிவ் காலனி, பொழிச்சலூர், சென்னை-600074
போன் 044-22632671 மின்னஞ்சல்: sbi.21334@sbi.co.in

**அசையும் சொத்திற்கான ஏல விற்பனை அறிவிப்பு**

| | | |
|---|---|---|
| கடன்தாரரின் பெயர் மற்றும் முகவரி | Mr.SAKTHIVEL E | தயாரிப்பு/மாடல்: |
| வாகன பதிவு எண். | TN 10 AE 4075 | FORD FIGODURATORQ DIESEL ZXI 1-4-2011 |

குறைந்தபட்ச விலை: ரூ.93,000/-+GST 18% டேவணித் தொகை: ரூ.9,300/- ஏல உயர்வு தொகை: ரூ.2,000/-

**விற்பனை விவரங்கள்**

| | |
|---|---|
| மின் ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 10.05.2022 - காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை 5 நிமிடங்கள் கால அவகாசம் தொடர்ந்து தானாகவே நீட்டிக்கப்படும் |
| டேவணித் தொகை செலுத்தும் முறை | State Bank of India, Pozhichalur Branch, Chennai என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக செலுத்தவேண்டும் |
| வாகனத்தைப் பார்வையிடும் தேதி | 04.05.2022 |
| இணைய வழியாக டேவணித் தொகையுடன் விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க கடைசி தேதி | 07.05.2022 மாலை 4 மணி வரை |

மேலும் வாகனம் பற்றி அறிய விரும்பும் விலைக்குறிப்பீட்டாளர்கள், பாரத ஸ்டேட் வங்கி, பொழிச்சலூர் கிளையில் அலுவலக நேரத்தில் 7550106285, 9940522959 திரு. ரவிக்குமார், என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குபவர் மின்னஞ்சல் : www.bankeauctions.com, tn@c1india.com

இடம் : சென்னை
தேதி : 29.04.2022
அதிகாரபூர்வ அதிகாரி
பாரத ஸ்டேட் வங்கி / பொழிச்சலூர் கிளை, சென்னை

**SBI பாரத ஸ்டேட் வங்கி**
மேடவாக்கம் கிளை

எண். 150, VGP புஷ்பா நகர், மேடவாக்கம் - வேளச்சேரி சாலை, மேடவாக்கம்
சென்னை - 600100 மின்னஞ்சல்: sbi.18394@sbi.co.in

**அசையும் சொத்திற்கான ஏல விற்பனை அறிவிப்பு**

| | | |
|---|---|---|
| கடன்தாரரின் பெயர் மற்றும் முகவரி | Mr. VINOTHKUMAR R | |
| வாகன பதிவு எண். | TN 14 A 8901 | தயாரிப்பு/மாடல்: MARUTI CELERIO |

குறைந்தபட்ச விலை: ரூ.1,25,000/-+GST18% டேவணித் தொகை: ரூ.12,500/- ஏல உயர்வு தொகை: ரூ.2,000/-

**விற்பனை விவரங்கள்**

| | |
|---|---|
| மின் ஏலம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 10.05.2022 - காலை 11.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரை 5 நிமிடங்கள் கால அவகாசம் தொடர்ந்து தானாகவே நீட்டிக்கப்படும் |
| டேவணித் தொகை செலுத்தும் முறை | State Bank of India, Medavakkam Branch, Chennai என்ற பெயரில் கேட்பு வரைவோலையாக செலுத்தவேண்டும் |
| வாகனத்தைப் பார்வையிடும் தேதி | 04.05.2022 |
| இணைய வழியாக டேவணித் தொகையுடன் விலைப்புள்ளிகள் சமர்ப்பிக்க கடைசி தேதி | 07.05.2022 மாலை 4 மணி வரை |

மேலும் வாகனம் பற்றி அறிய விரும்பும் விலைக்குறிப்பீட்டாளர்கள், பாரத ஸ்டேட் வங்கி, மேடவாக்கம் கிளையில் அலுவலக நேரத்தில் 9551507502, 9940522959 திரு. ரவிக்குமார், TVS Crediets என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் அல்லது வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குனரான திரு. M/s C1 India Pvt. Ltd. மின்னஞ்சல் : www.bankeauctions.com, tn@c1india.com, (தொடர்பு எண். +919840446485) தொடர்பு கொள்ளலாம்.

இடம் : சென்னை
தேதி : 29.04.2022
அதிகாரபூர்வ அதிகாரி
பாரத ஸ்டேட் வங்கி / மேடவாக்கம் கிளை, சென்னை

**சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**
கடன் மற்றும் வசூல் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612001
e-mail: crmd@cityunionbank.in, Tel: 0435-2432322, Fax: 0435-2431746

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் / நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-ன் படி
டெண்டருடன் கூடிய
ஏல விற்பனை அறிவிப்பு

[illegible]

| ஏல தேதி | ஏல நடைபெறும் இடம் |
|---|---|
| 10.06.2022 | சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் மதுரவாயல் கிளை, KRM டவர்ஸ், 4-A, பல்லவன் நகர் மெயின் ரோடு, சிங்காரவேலன் நகர், மதுரவாயல், திருவள்ளூர் - 600095 போன்: 044-23781805, செல்: 9344038607 |

டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

[illegible]

இடம் : கும்பகோணம்
தேதி : 30.04.2022
அதிகாரப்பூர்வ அதிகாரி

**டச்சு பேங்க் AG**

பிற்சேர்க்கை-IV [விதி-8(1)] சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ளவர் இந்திய டச்சு பேங்க் AG-இன் ("பேங்க்") அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 9-இன் [illegible]

**அசையாச் சொத்தின் விவரம்**

இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய நிலம் மற்றும் கட்டடம். நிலத்தின் பரப்பளவு 1200 சதுர அடி, சர்வே எண் 166/1, பட்டாப்படி சர்வே எண் 166/17A, வளசரவாக்கம் கிராமம், மனை எண் 91, கதவு எண் 3/2, புதிய பெத்தனியா நகர், 2 ஆவது தெரு, வளசரவாக்கம், சென்னை-600087. நிலத்தின் எல்லைகள் பின்வருமாறு: வடக்கு : மனை எண் 92, தெற்கு : மனை எண் 90, கிழக்கு : மனை எண் 94, மேற்கு : 18 அடிச் சாலை. அளவு: கிழக்கு மேற்காக வடக்கில் - 50 அடி, தெற்கில் - 50 அடி, மேற்குத் தெற்காகக் கிழக்கில் - 24 அடி, மேற்கில் - 24 அடி. இது வட சென்னை பதிவு மாவட்டம் மற்றும் விருகம்பாக்கம் சார்பதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்துக்கு உட்பட்டது.

நாள்: 01.05.2022
இடம்: சென்னை
திரிவிக்ரம் கம்பம்
அதிகாரப்பூர்வ அலுவலர், டச்சு பேங்க் A.G.

## பொது அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம் / ஸ்ரீ பெரும்புதூர் வட்டம் வரதராஜபுரம் கிராமத்தில் உள்ள பல்வேறு சர்வே எண்களில் அடங்கிய நிலங்களின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் **11.88½** சென்ட் நிலத்தை, சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உரிமையாளர்களிடமிருந்து அதாவது கேணன்வாலி பவுண்டேசன் (CANAN VALLEY FOUNDATION) நிர்வாக அறங்காவலர் டாக்டர். ஆண்டோ தாராப்பன், சென்னை அவர்களிடமிருந்து எங்கள் கட்சிக்காரர் பரிவர்த்தனை செய்ய தீர்மானித்துள்ளார். எனவே இந்த சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து மீது எவருக்கேனும் (தனி நபர்கள் / வங்கிகள் / சங்கங்கள் / நிதி நிறுவனங்கள்) எவ்விதமான உரிமையும், அதிகாரமும், பாத்தியமும் அதில் ஒரு கோரிக்கையும் இருந்தால் அதாவது அதில் விற்பனை, பரிமாற்றம், அடமானம், பரம்பரையாக உரிமை, தானம், பராமரிப்பு, அனுபோக பொறுப்பு அனுபோக வாடகை ஒப்பந்தம், குத்தகை, நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயத்தின் உத்தரவு அல்லது ஆணை போன்றவைகள் எவரேனும் பெற்றிருந்தால் அவற்றின் உரிமை நிரூபிக்க தேவையான ஆவணங்களுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட **15** தினங்களுக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அணுக வேண்டும். அவ்வாறு எவரேனும் அவர்களின் உரிமையை **15** தினங்களுக்குள் தெரிவிக்காவிட்டால் அவர்கள் தங்களுடைய உரிமையை விட்டுக் கொடுத்ததாக கருதப்பட்டு எங்களது கட்சிக்காரர் சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உரிமையாளர்களிடமிருந்து நிலத்தை பரிவர்த்தனை செய்ய எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கருதப்படும்.

**சொத்து விவரம்**

திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம் வரதராஜபுரம் கிராமத்தில் உள்ள பல்வேறு சர்வே எண்களில் அடங்கிய நிலங்களின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் **9.68½** சென்ட் கீழ் வரும் அட்டவனையில் உள்ளன.

| வரிசை எண் | சர்வே எண் | அளவு | |
|---|---|---|---|
| | | ஏக்கர் | சென்ட் |
| 1 | 5/1B | 0 | 31½ |
| 2 | 18 | 1 | 96 |
| 3 | 7/2B | 0 | 52 |
| 4 | 9/2 | 0 | 83 |
| 5 | 14 & 15 | 2 | 68 |
| 6 | 16 | 0 | 76 |
| 7 | 17 | 0 | 85 |
| 8 | 45 | 1 | 77 |
| | **மொத்தம்** | **9** | **68½** |

திருவள்ளூர் மாவட்டம், ஸ்ரீ பெரும்புதூர் வட்டம் வரதராஜபுரம் கிராமத்தில் உள்ள பல்வேறு சர்வே எண்களில் அடங்கிய நிலங்களின் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் **2.20** சென்ட் கீழ் வரும் அட்டவனையில் உள்ளன.

| வரிசை எண் | சர்வே எண் | அளவு | |
|---|---|---|---|
| | | ஏக்கர் | சென்ட் |
| 1 | 8 | 0 | 58 |
| 2 | 19 | 0 | 60 |
| 3 | 20/1 | 1 | 2 |
| | **மொத்தம்** | **2** | **20** |

| ஆக மொத்தம் (9.68½ + 2.20) | 11 Acres 88½ Cents |
|---|---|

மேற்கண்ட சொத்து பூந்தமல்லி உப பதிவு மாவட்டம் மற்றும் தென் சென்னை பதிவு மாவட்டம் உட்பட்டது.

**கே.ஆர்.ரமேஷ் குமார், வழக்குரைஞர்**
"சிக்கி", இந்தியன் சம்பர் பில்டிங் (மெயின்), நெ.6, முதல் தளம், எச்பிளௌனட்
சென்னை 600108 போன் நெ. 044–25346688 மொபைல் நெ. 9841047244

ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்

**STAR HEALTH AND ALLIED INSURANCE CO LTD**
Corp. Office: "Star Insurance Towers", No.1, New Tank Street,
Valluvar Kottam High Road, Nungambakkam, Chennai - 600 034.
Toll Free No. : 1 800 425 2255, Website: www.starhealth.in
CIN: L66010TN2005PLC056649, Email: info@starhealth.in

**STATEMENT OF FINANCIAL RESULTS FOR THE QUARTER AND YEAR ENDED MARCH 31, 2022**

(₹ in Lakhs)

| Sr. No. | Particulars | Quarter ended | | Year ended | |
|---|---|---|---|---|---|
| | | March 31, 2022 Audited | March 31, 2021 Audited | March 31, 2022 Audited | March 31, 2021 Audited |
| 1 | Total Income from Operations (Note 1) | 368,915 | 326,182 | 1,146,347 | 938,854 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and / or Extraordinary Item) | (11,576) | (127,838) | (139,664) | (144,581) |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and / or Extraordinary Item) | (11,576) | (127,838) | (139,664) | (144,581) |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and / or Extraordinary Item) | (8,204) | (95,692) | (104,067) | (108,571) |
| 5 | Total Comprehensive Income for the period (Comprising Profit / (loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax) (Note 2) | NA | NA | NA | NA |
| 6 | Paid up Equity Capital | 57,552 | 54,809 | 57,552 | 54,809 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) | - | - | - | - |
| 8 | Securities Premium Account | 570,306 | 366,079 | 570,306 | 366,079 |
| 9 | Net Worth | 451,338 | 348,434 | 451,338 | 348,434 |
| 10 | Paid Up Debt Capital | 72,000 | 25,000 | 72,000 | 25,000 |
| 11 | Debenture Redemption Reserves | 1,500 | 1,500 | 1,500 | 1,500 |
| 12 | Earnings per share (face value of ₹10/- each) | | | | |
| | 1. Basic (in ₹) | (1.43) | (18.28) | (18.65) | (21.75) |
| | 2. Diluted (in ₹) | (1.43) | (18.28) | (18.65) | (21.75) |
| 13 | Debt Equity Ratio (No. of times) | 0.16 | 0.07 | 0.16 | 0.07 |
| 14 | Debt Service Coverage Ratio (No. of times) | (6.04) | (201.52) | (29.59) | (55.48) |
| 15 | Interest Service Coverage Ratio (No. of times) | (6.04) | (201.52) | (29.59) | (55.48) |

Notes:
1. Total Income from Operations represents Gross Written Premium (GWP).
2. The Indian Accounting Standards (IND AS) are currently not applicable to Insurance Companies in India.
3. The above results for the quarter and year ended March 31, 2022 were reviewed by the Audit Committee and approved by the Board of Directors in their meeting held on April 29, 2022.
4. The above is an extract of the detailed format of quarterly and yearly Financial results filed with the Stock Exchange under Regulation 33 and 52 of the SEBI (Listing Obligations and Disclosure requirements) regulations, 2015. The full format of quarterly and yearly Financial results are available on the website of Stock Exchanges (www.nseindia.com) and (www.bseindia.com) and the Company (www.starhealth.in).

**Registration No. and Date of Registration with the IRDAI : 129/16.03.2006**

For and on behalf of Board of Directors
Sd/-
V. Jagannathan
Chairman and Chief Executive Officer
DIN: 01196055

Place: Chennai - 600 034
Date: April 29, 2022

SHAI/2022-23/PRINT(FR FOR QTR AND YEAR ENDED 31-03-2022)/001. Insurance is the subject matter of solicitation. For more details on risk factors, terms and conditions please read the sales brochure carefully before concluding a sale. IRDAI clarifies to public that IRDAI or its officials do not involve in activities like sale of any kind of insurance or financial products nor invest premiums. IRDAI does not announce any bonus. Public receiving such phone calls are requested to lodge a police complaint along with details of phone call, number.